1994 நவம்பர் 7]

வீடு கட்டவேண்டும் என்பதற்காகத்தான். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நோக்கமே "ஒரு குடும்பம் ஒரு வீடு" என்கின்ற தேர்தல் அறிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான். அதுதான் வீட்டு வசதித் துறையினுடைய நோக்கம் ஆகும். எனவே, அடித்தளம் அமைக்காமல் அவர்களுக்குக் கடன் கொடுக்கின்ற சூழ்நிலை உருவானால் அவர்கள் அந்தக் கடன் தொகையைப் பெற்றுக் கொண்டு வேறு உபயோகங்களுக்கு அவற்றை மாற்றி அமைத்துக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட்டால் வீடு கட்டும் லட்சியம், அவர்கள் சொந்த வீடு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற லட்சியம் நிறைவேறாமல் போய்விடும். எனவே, அந்த நிபந்தனையைத் தளர்த்த இயலாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 30, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 31, திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

31—

தமிழ்நாட்டில் கரும்பு விவசாயிகளிடம் விற்பனை வரி வசூலித்தல்

**10243*–திரு. ஆர். ஈஸ்வரன்:

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒரு டன் கரும்புக்கு ரூ.74/- விவசாயிகளிடமிருந்து விற்பனை வரி வசூலிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ரூ.24-ஐ அரசு பிடித்தம் செய்துகொண்டு மீதி ரூ.50-ஐ ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கரும்புக்கு விற்பனை வரி விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் விவசாயிகளிடமிருந்து ஒரு டன்னுக்கு கொள்முதல் வரியாக சுமார் 74 ரூபாய் பிடிக்கப்படுகிறது. இதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு விற்பனை வரி விதிக்கப்படுவதில்லை. கொள்முதல் வரி மட்டும்தான் விதிக்கப்படுகிறது. 1989-ஆம் ஆண்டு 14%-ஆக இருந்த கொள்முதல் வரியை 1-10-92 முதல் 11%-ஆகக் குறைத்து விதிக்கப்பட்டு வரி வசூல் செய்யப்படுகிறது. கரும்பு ஆலை அதிபர்கள் தங்கள் பொறுப்பில் இந்த வரியைச் செலுத்த வேண்டும். அதுதான் விதி முறை. அப்படித்தான் வசூலிக்கப்படுகிறது. விவசாயிகளிடமிருந்து டன்னுக்கு 74 ரூபாய் வசூலிக்கப்படுகிறது என்பதாக அரசுக்குப் புகார் ஏதும் வரவில்லை. உறுப்பினரிடம் அப்படிப்பட்ட புகார் இருந்தால் அதனை உரிய முறையில் சமர்ப்பித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவில் ஒரு டன்னுக்கு 20 ரூபாய் 80 பைசா பிடிக்கிறார்கள்; ஆந்திராவில் 16 ரூபாய் பிடிக்கிறார்கள்; உத்திரப்பிரதேசத்தில் ஒரு டன்னுக்கு 17 ரூபாய் பிடிக்கிறார்கள்; ஹரியானாவில் (குறுக்கீடு) தமிழ்நாட்டில் ஒரு டன்னுக்கு இவ்வளவு நீங்கள் பிடிக்கிறீர்கள். இல்லை என்று சொல்ல முடியாது. ஒரிசா மற்றும் 6, 7 மாநிலங்களில் இந்தக் கொள்முதல் வரி பிடிக்கப்படுவதில்லை. 20 ரூபாய்க்குக் கீழேதான் அந்த 7 மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் வரி பிடிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு அரசு ஒரு டன்னுக்கு 74 ரூபாய் பிடிக்கிறது. அவ்வாறு பிடிப்பதில் அந்த 20 ரூபாயை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மீதமிருக்கும் 50 ரூபாயை விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாகக் கொடுக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரோ சொல்லிய தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். டன்னுக்கு 74 ரூபாய் என்ற விகிதாச்சாரம் தமிழ்நாட்டில் நடைமுறையில் இல்லை; கொள்முதல் வரிதான் விதிக்கப்படுகிறது. கொள்முதல் வரியை விவசாயிகள் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. ஆலை அதிபர்கள்தான் மொத்தக் கொள்முதலுக்கு, கடைசி கொள்முதல்

1994 நவம்பர் 7]

வரியாக 11% என்ற முறையில் செலுத்தவேண்டும். அதுதான் நடைமுறையில் இருக்கிறது. இந்த நடைமுறையை ஆலை அதிபர்கள் தவறாகக் கையாளுவார்களானால், தகுந்த ஆதாரத்துடன் புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகள் நேரடியாகக் கொள்முதல் வரியைச் செலுத்தவில்லையே தவிர, ஆலை அதிபர்கள் அவர்களுடைய பணத்திலிருந்து கட்டாமல் கரும்பு அனுப்புகின்ற விவசாயிகளிடமிருந்து பிடித்துக் கொடுக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அப்படியென்றாலும் இந்த 11% என்பதுகூட மிகவும் அதிகம்தானே ? அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். 14 சதவிகிதமாக இருந்த வரியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு 1-10-1992 முதல் 11 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறது என்று. இதை அவர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். வரி விகிதத்தைக் குறைக்கவேண்டுமென்ற கோரிக்கை இப்போது எழவில்லை. இது நடைமுறையில் இருந்துகொண்டிருக்கின்றது. நான் முதலிலே சொன்ன பிரகாரம், கரும்பு விவசாயிகள் வரியைச் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. அப்படிச் செலுத்தவேண்டும் என்று சொன்னால் விற்பனை வரியாக விதிக்கப்பட்டிருக்கும். விவசாயிகளுக்கு வரி விதிக்கக்கூடாது என்பதற்காகத்தான் கரும்பைப் பொறுத்தமட்டில் கொள்முதல் வரியாக விதிக்கப்பட்டிருக்கின்றது. கொள்முதல் வரியை ஆலை அதிபர்கள் விவசாயிகளிடமிருந்து பிடித்தம் செய்யக்கூடாது. சட்டபூர்வமாக பில்லில் வரி என்று போட்டு கழித்திருப்பார்கள் என்றால் அந்த வரியை அவர்கள் திருப்பிச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகள் உரிமை பெற்றவர்களாவார்கள். கரும்பு ஆலை அதிபர்கள் வரியை விவசாயிகளிடம் பிடித்தம் செய்திருந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.